**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.20/2022** |
| Sessions | : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 8** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | நமசிவாயம் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் அம்மாபாளையத்தில் குடியிருக்கிறேன். மில்லில் வேலைசெய்கிறேன். வழக்கின் 1வது எதிரியை தெரியும். அவர் என் மைத்துனரின் மகனாவர். ஆஜர் 2வது எதிரியை தெரியாது. வழக்கில் இறந்துபோன பச்சையம்மாள் என்னுடைய மாமியார் ஆவார். என்மனைவி பெயர் இந்திராணி ஆகும். சுமார் 3, 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் என்மாமியார் பச்சையம்மாள் என்னிடம் 1வது எதிரியும் அவர் அம்மாவும் அவர் வசிக்கும் வீட்டில் ஆடு, மாடுகளை கட்டி தொந்தரவு செய்கிறார்கள் என்று சொன்னார். எதுவாகவும் இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று பச்சையம்மாளை அவர் வீட்டில் கொண்டுபோய் விட்டேன். அதன்பின்னர் அடுத்தநாளைக்கு அடுத்தநாள் பச்சையம்மாள் இறந்துவிட்டதாக தகவல்வந்தது. நான் வீட்டிற்கு போனேன். உடல் கட்டுபோடப்பட்டிருந்தது. காயத்தை நான் கவனிக்கவில்லை. 1வது எதிரி அடித்து கொன்றுபோட்டதாக கேள்விபட்டேன். இறந்துபோன 1வது எதிரியின் தகப்பனார் சங்கர் ரூ.1லட்சம் பணம் பச்சையம்மாளுக்கு

தரவேண்டியுள்ளது என்று ஏற்கனவே பச்சையம்மாள் சொல்லிகொண்டிருந்தார். அதனால் தான் சண்டை ஆரம்பமானது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்னுடைய சொந்த ஊர் அம்மாபாளையம் ஆகும். நான் திருமணம் செய்தது விளாமுத்தூரை சேர்ந்த பச்சையம்மாளின் 2வது மகளை ஆகும். நான் விளாமுத்தூருக்கு நான் மாதத்திற்கு சுமார் 1முறை வருவேன். ஏதாவது விசேஷம் என்றால் வருவேன். என்ஊருக்கும், விளாமுத்தூருக்கும் இடையே சுமார் 30 கி.மீ தூரம் இருக்குமா என்றால் சுமார் 15, 16 கி.மீ தூரம் இருக்கும். அவ்வாறு வந்தால் உடனே கிளம்பிவிடுவேன். அங்கு தங்கமாட்டேன். எனக்கு அம்மாபாளையத்தில் அப்போது விவசாய நிலங்கள் இருந்தது. பச்சையம்மாள் இறப்பதற்கு சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சங்கர் இறந்துவிட்டார். ஆடு, மாடுகள் கட்டுவது சம்மந்தமாக பிரச்சனை இருந்ததாக போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. இறந்த சமயத்தில் நான் காவல்நிலையம் சென்றிருந்தேன், அப்போது என்னை விசாரிக்கவில்லை. ஊர்க்காரர்கள் போனில் தகவல் சொன்னதின் பேரில் நான் விளாமுத்தூர் சென்றேன். அப்போது காலை சுமார் 08.00 மணிக்குள் இருக்கும். பணம் ரூ.1லட்சம் கொடுக்கவேண்டியுள்ளது என்று சங்கர் சொல்லி தெரியுமா என்றால் பணம் வாங்கிகொண்டு தான் அவரை நாங்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தோம். எனக்கும், சங்கர் குடும்பத்திற்கும் இடையே சொத்து சம்மந்தாக முன்விரோதம் இருந்தது என்றும், அதன்காரணமாக எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று ரூ.1லட்சம் கொடுக்கல், வாங்கல் கிடையாது என்றும், அவ்வாறு இருந்திருந்தால் நான் அந்த பிரச்சனையை பேசி முடித்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரைணையில் சொன்னது போன்று பச்சையம்மாளுக்கும், 1வது எதிரி குடும்பத்திற்கு இடையே எந்த பிரச்சனையிம் கிடையாது என்றும் தற்போது போலிசார் சொல்லிகொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பச்சையம்மாள் இறக்கும்போது சுமார் 90 வயதிருக்கும். பச்சையம்மாள்

வயது முதிர்வின் காரணமாக கொரானா காலத்தில் மூச்சுதிணறறால் இறந்துவிட்டார் என்றும், நான் கேள்விபட்டது போன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை காரணமாக எதிரிகளை பழிவாங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.